# <u>DEPOSITION OF WITNESS</u>

## <u>(Chapter XXII Code of Criminal Procedure)</u>

<u>கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| Spl.C.C.No. | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.46 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | சிவராசு | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 8th day of November 2019.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சி தலைவராக பணிபுரிந்து வருகிறேன். 2011 ஆம் வருடத்தில் நான் கோயமுத்தூர் மாநகராட்சியில் துணை ஆணையராக பணிபுரிந்து வந்தேன். 11.1.2018 ஆம் தேதியிட்ட கடிதம் எண்.ஆர்.சி.நெ.252/2011 /PUB/HQ ன்படி ஊழல் மற்றும் கண்காணிப்புத்துறை கூடுதல் கண்காணிப்பாளர் பொங்களூர் பழனிசாமி அவர்கள் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற கோயமுத்தூர் கிழக்கு சட்டமன்ற தொகுதி மற்றும் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற கோயமுத்தூர் தெற்கு சட்டமன்ற தொகுதி சம்மந்தமாக மேற்படி பொங்களூர் பழனிசாமி வேட்பாளராக போட்டிடுவதற்காக தாக்கல் செய்திருந்த வேட்புமனு மற்றும் இதர ஆவணங்களின் நகல்களை கோரியிருந்தார். அதன்படி எங்கள் அலுவலக கடித எண்.371/2012/Election நாள் 02-03-2012 ல் மேற்படி நபர் தாக்கல் செய்திருந்த வேட்பு மனு மற்றும் இதர ஆவணங்கள் கோப்பிலிருந்து சரிபார்க்கப்பட்டு அனுப்பபப்பட்டது. அதில் வேட்புமனு நகல் (படிவம் 2 பி), வாக்காளர் பட்டியல் நகல், வேட்புமனு தாக்கல் செய்ய செலுத்தப்பட்ட தொகையின் செலான் நகல், சொத்து விவரங்கள் அடங்கிய அபிடவிட் நகல், அவர் போட்டியிட்ட அரசியல் கட்சியின் சார்பாக வழங்கப்பட்ட படிவம் ஏ, மற்றும் படிவம் பி மற்றும் அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சின்னத்திற்கான கடிதம் ஆகியவற்றின் சான்றொப்பமிட்ட நகல்களை முகப்பு கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். 2006 ஆம் ஆண்டு

தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் அவருக்கு உண்டான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூபாய் 10,38,36,477/- (பத்து கோடியே முப்பத்தி எட்டு லட்சத்து முப்பத்தி ஆராயிரத்து நானூற்றி எழுபத்தி ஏழு மட்டும்) எனச் சொல்லியுள்ளார். அதில் அசையும் சொத்தின் மதிப்பு ரூ.6,41,24,827/- (ஆறு கோடியே நாற்பத்தியோரு லட்சத்தி இருபத்தி நாலாயிரத்து எண்ணூத்தி இருபத்தி ஏழு) எனவும், அசையாச் சொத்து ரூ.3,97,11,650/- (மூன்று கோடியே தொன்னூற்று ஏழு லட்சத்து பதினொன்றாயிரத்து அருநூற்று ஐம்பது மட்டும்) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை முகப்பு கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். அது பக்கம் 1 முதல் 30 வரை உள்ளடக்கியதாகும். அந்த கோப்பு அ.த.சா.ஆ.90 ஆகும்.

இதேபோன்று 2011 ஆம் ஆண்டு தாக்கல் செய்த சொத்து குறித்த சத்தியப்பிரமாணப் பத்திரத்தில் அசையும் சொத்தின் மொத்த மதிப்பு ரூ.5,21,10,000/- (ஐந்து கோடியே இருபத்தி ஒரு லட்சத்தி பத்தாயிரம் மட்டும் ) என்றும், அசையாச் சொத்தின் மதிப்பு ரூ.10,45,53,000/- (பத்து கோடியே நாற்பத்தி ஐந்து லட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரம் மட்டும் ) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களின் சான்றொப்ப நகல்களை முகப்பு கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். அது பக்கம் 1 முதல் 115 வரையானதாகும். அந்தக் கோப்பு அ.த.சா.ஆ.91 ஆகும்.

அ.த.சா.ஆ.90 கோப்பில் 2006 ஆம் ஆண்டு தாக்கல் செய்த சொத்து குறித்த சத்தியப்பிரமாணப் பத்திரத்தில் திரு பொங்களூர் பழனிசாமியின் மனைவி லேட் பி.விஜயலட்சுமி என்பவரது பெயரில் அசையாச் சொத்தின் மதிப்பு ரூ.1,18,06,500/- (ஒரு கோடியே பதினெட்டு லட்சத்து ஆறாயிரத்து ஐநூறு மட்டும்) என்றும், அசையும் சொத்தின் மதிப்பு ரூ.66,69,974/- (அறுபத்தி ஆறு லட்சத்து அறுபத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி நான்கு மட்டும்) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூடுதல் கண்காணிப்பாளர் இது சம்மந்தமாக என்னை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார்.

## எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை எங்கு வைத்து விசாரித்தார் என்றால் கோவை மாநகராட்சி அலுவலகத்தில் வைத்து விசாரித்தார். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதிவு செய்த வாக்கு மூலத்தை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். கூடுதல் காவல்

கண்காணிப்பாளரிடம் அளித்த வாக்கு மூலத்தில் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன சங்கதிகள் அனைத்தையும் சொன்னேனா என்றால் பொங்கலூர் பழனிசாமி தாக்கல் செய்திருந்த சத்தியப்பிரமாணத்தில் கண்ட அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் விவரங்களைச் சொன்னேன். **2006** மற்றும் **2011** ஆம் வருடத்தில் தாக்கல் செய்த வேட்புமனுவோடு சொத்துப் பத்திரங்கள் எதுவும் இணைக்கப்பட்டிருந்ததா என்றால் அவ்வாறு இணைக்கப்பட்டிருக்கவில்லை. அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் மதிப்பை காண்பிப்பதற்கு துணையாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்பட்டிருந்ததா என்றால் அவ்வாறு துணை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் அரசு துறையிடமிருந்தோ அல்லது பொது நிதி நிறுவனங்கள் எவற்றில் இருந்தோ தனக்கு வரவேண்டிய தொகை எதுவும் நிலுவையில் இல்லை என்றும், நிலம் விற்பது தொடர்பான பரிவர்த்தனையில் மொத்தம் ரூ.**30** லட்சம் வரவேண்டியுள்ளது என்றும் பொங்களூர் பழனிசாமி குறிப்பிட்டுள்ளார் என வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் **2011** ஆம் வருடத்தில் வேட்புமனுவுடன் தாக்கல் செய்த சத்தியப்பிரமாண வாக்கு மூலத்தில் திரு.பொங்களூர் பழனிசாமியின் அசையாச் சொத்தின் மொத்த மதிப்பு ரூ.**45,94,049/-** என கூறியுள்ளேனா என்றால் அவ்வாறு கூறவில்லை. ஆனால் சத்தியப்பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகையான ரூ.**3,97,11,650/-** எனச் சொன்னேன். **2011** ஆம் ஆண்டு தாக்கல் செய்த வேட்பு மனுவில் திரு.பொங்கலூர் பழனிசாமியின் அசையும் சொத்தின் மதிப்பு ரூ.**5,21,10,000/-** என்று வேட்புமனுவுடன் இணைக்கப்பட்டுள்ள சத்தியப்பிரமாண பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் **2011** ஆம் ஆண்டு தாக்கல் செய்த சத்தியப்பிரமாணத்தில் அசையும் சொத்தின் மதிப்பு ரூ.**10,45,53,000/-** என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் நான் சொல்லியுள்ள சங்கதிகளை மாற்றி தற்போது நீதிமன்றத்தில் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/சிவராசு

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| Spl.C.C.No. | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.47 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | ஸ்ரீதேவி | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 8th day of November 2019.

முதல் விசாரணை

நான் தற்போது சென்னை, நங்கநல்லூரில் கார்ப்பரேஷன் வங்கியில் முதன்மை மேலாளராக பணி புரிந்து வருகிறேன். 2010 ஆம் வருடம் நான் திருநெல்வேலி ஜங்ஷன் பகுதியில் இயங்கி வந்த கார்ப்பரேஷன் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வந்தேன். 24.2.2012 ஆம் தேதியிட்ட கடிதம் எண்.R.C.252/2011 / PUB / HQ என்ற கடிதத்தை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கொடுத்தார். அந்த கடிதத்தில் காசோலை எண்.130532 ல் ரூ.12,50,000/- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையிலிருந்து என்.பழனிசாமி என்பவருக்கு 7.12.2005 ஆம் தேதியில் கிளியரிங் மூலமாக பணமாக்கப்பட்டுள்ளது. காசோலை எண்.129112 நாள் 23.7.2007 தேதியிட்ட காசோலை ரூ.3,26,002/- கிளியரிங் மூலமாக 14.8.2007 ஆம் தேதியில் திருநெல்வேலி ஸ்டேட் பேங்க் மூலம் எம்.இந்து என்பவரின் பெயரில் பணமாக்கப்பட்டுள்ளது. காசோலை எண்.129115 நாள் 23.07.2007 ஆம் தேதியிட்ட ரூ.3,26,002/- கிளியரிங் தேதி 12.9.2007 ல் ஐ.சி.ஐ.சி ஐ வங்கியில் பி.பைந்தமிழ் என்பவரின் பெயரில் பணமாக்கப்பட்டுள்ளது. காசோலை எண் 129116 நாள் 23.7.2007 ரூ.3,90,024/- கிளியரிங் தேதி 12.9.2007 ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியில் என்.பழனிசாமி என்பவரின் பெயரில் பணமாக்கப்பட்டுள்ளது. காசோலை

எண்.129117 நாள் 18.9.2007 ஆம் தேதி ரூ.3,26,003/- கிளியரிங் தேதி 12.9.2007 ஐ.சி.ஐ,சி.ஐ வங்கியில் என்.பழனிசாமி என்பவரின் பெயரில் பணமாக்கப்பட்டுள்ளது. கூடுதல் காவல்



கண்காணிப்பாளரின் வேண்டுகோள் கடிதத்தில் சொல்லியுள்ள காசோலை எண்.131551 என்ற காசோலை எங்கள் வங்கிக்கு வரவில்லை. மேற்படி விவரங்களை எங்கள் வங்கியின் கடிதம் மூலமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பியுள்ளேன். அது பக்கம் 1 முதல் 16 வரை உள்ளது. அந்தக் கோப்பு அ.த.சா.ஆ.92 ஆகும். இது சம்மந்தமாக என்னை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார்.

## எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

**14.3.2012** ஆம் தேதியில் நாங்கள் கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்குஅனுப்பிய கடிதத்தில் சுப்பு ரியாலிட்டி **(**சௌத்**)** பிரைவேட் லிமிடெட் என்பவரால் வழங்கப்பட்டிருந்த ஐந்து காசோலைக்கான விவரங்கள் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்**.** மேற்படி கடிதத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளரின் கடிதத்தை பார்வை கடிதமாக குறிப்பிட்டுள்ளோம்**.** அந்தப்பார்வை கடிதத்தின் தேதி **24.02.2012** தேதியிட்டது என்றால் சரிதான்**.** மேற்படி **24.2.2012** ஆம் தேதியிட்ட கடிதத்தில் அர்ஜுணன்**,** த**/**பெ நாச்சிமுத்துக் கவுண்டர் அல்லது பழனிசாமி**,** த**/**பெ நாச்சிமுத்துக் கவுண்டர் ஆகியோர்களது பெயரில் அக்கடிதத்தில் கண்ட ஆறு காசோலைகள் கொடுக்கப்பட்டுள்ளது என்றும்**,** அந்தக் காசோலைகளின் பரிமாற்று விவரங்கள் குறித்து கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான்**.** அந்தக் காசோலைகள் திரு**.**எம்**.**சுப்பிரமணியம்**,** சுப்பு ரியாலிட்டி **(**சௌத்**)** பிரைவேட் லிமிடெட் என்ற கணக்கிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்துக் கொடுக்கும்படி கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான்**. 24.2.2012** ஆம் தேதியிட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எங்கள் வங்கிக்கு அளித்த வேண்டுகோள் கடிதத்தில் பைந்தமிழ் என்ற பெயரோ**,** இந்து என்ற பெயரோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்**.** மேற்படி ஆறு காசோலைகளும் கார்ப்பரேஷன் வங்கி கிளியரிங் மூலமாக பாஸ்ஆகியுள்ளது**.** மேற்படி ஆறு காசோலைகளும் எந்த வங்கியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது**.** அது யாரது கணக்கில் அக்காசோலைகள் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது**.** மேற்படி ஆறு காசோலைகள் யாரது பெயரில் வரையப்பட்டிருந்தது

என்றால் காசோலை எண்.**130532** சுப்பு ரியாலிட்டி **(**சௌத்**)** பிரைவேட் லிமிடெட் என்பவரால் என்.பழனிசாமி என்பவரின் பெயரில் கொடுக்கப்பட்டு அக்காசோலை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி



கிளியரிங் செக் மூலமாக பாஸ் ஆகியுள்ளது. மேற்படி காசோலை யாரது கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. காசோலை எண்.**129112** சுப்பு ரியாலிட்டி **(**சௌத்**)** பிரைவேட் லிமிடெட் என்பவரால் இந்து என்பவரின் பெயரில் ஸ்டேட் பேங்க் மூலமாக **14.8.2007** ஆம் தேதி அன்று கிளியரிங் மூலமாக பணம் செலுத்தப்பட்டுள்ளது. யாராது வங்கிக் கணக்கில் காசோலை தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. காசோலை எண்.**129115** சுப்பு ரியாலிட்டி **(**சௌத்**)** பிரைவேட் லிமிடெட் என்பவரால் பைந்தமிழ் என்பவருக்கு கொடுக்கப்பட்டு என்பவரது பெயரில் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி **12.9.2007** ஆம் தேதி கிளியரிங் மூலம் பணம் செலுத்தப்பட்டுள்ளது. அந்தக் காசோலை யாரது வங்கிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது. காசோலை எண்.**129116** சுப்பு ரியாலிட்டி **(**சௌத்**)** பிரைவேட் லிமிடெட் என்பவரால் என்.பழனிசாமி என்பவருக்கு கொடுக்கப்பட்டு ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி கிளியரிங் மூலம் **12.9.2007** ஆம் தேதியில் பணம் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி காசோலை யாரது வங்கிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. காசோலை எண்.**129117** சுப்பு ரியாலிட்டி **(**சௌத்**)** பிரைவேட் லிமிடெட் என்பவரால் என்.பழனிசாமி என்பவரது பெயரில் கொடுக்கப்பட்டு**,** ஐ.சி.ஐ.சிஐ வங்கி கிளியரிங் மூலமாக **12.9.2007** ஆம் தேதியில் பணம் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி காசோலை யாரது வங்கிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. எம்.சுப்பிரமணியம் சுப்பு ரியாலிட்டி **(**சௌத்**)** பிரைவேட் லிமிடெட் எந்த வருடத்திலிருந்து எங்கள் வங்கியில் கணக்கு வைத்திருக்கிறார் என்ற அந்த விவரங்கள் எனக்கு தற்போது தெரியவில்லை. ஆவணங்களைப் பார்த்துத்தான் சொல்ல முடியும். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் திரு.என்.பழனிசாமி என்பவரது பெயருக்கு ரூ.**12,50,000/-**த்திற்கு காசோலை எண்.**131551** என்ற காசோலை வழங்கப்பட்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**,** கோயமுத்தூர் கிளையில் **7.1.2005** ஆம் தேதி அன்று காசாக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் காசோலை எண்.**13052** எந்த வங்கியிலும் காசாக்கப்படவில்லையென சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை.

| | | |
|---|---|---|
| நீதிமன்றக்கேள்வி | - | மேலே சொல்லியுள்ள காசோலைகள் குறுக்கு கோடிட்ட காசோலைகளா**?** |
| பதில் | - | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வேண்டுகோள் கடிதத்தில் கேட்டிருந்த ஆறு காசோலைகளில் மேற்படி ஐந்து காசோலைகளும் **Account payee** காசோலைகள் என்பதாகும்**.** அவைகள் குறுக்கு கோடிட்ட காசோலைகள் ஆகும்**.** காசோலையை வரைந்தவரும் குறுக்கு கோடிட்டுள்ளார்**.** வங்கியும் குறுக்கு கோடிட்டுள்ளது**.** |

<u>மறு விசாரணை</u> இல்லை

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| Spl.C.C.No. | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.48 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | உமாசங்கர் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 8th day of November 2019.

முதல் விசாரணை

நான் தற்போது கோவை மாவட்டம் ஆர்.எஸ்.புரத்தில் இயங்கிவரும் ஐ.எஸ்.எஸ்.எண்டர்பிரைசஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தில் மேனேஜர் (டெக்னாலிஜி) ஆக 2005 ஆம் வருடத்திலிருந்து பணிபுரிந்து வருகிறேன். மேற்படி நிறுவனம் ஐ.எஸ்.இ செக்யூரிட்டீஸ் அண்ட் சர்வீஸ் லிமிடெட் என்ற பெயரில் இயங்கி வந்து தற்பொழுது இரண்டு வருடங்களாக ஐ.எஸ்.எஸ்.எண்டர்பிரைசஸ் லிமிடெட் என்ற பெயரில் இயங்கி வருகிறது. எங்கள் நிறுவனத்தில் பொங்களூர் திரு.பழனிசாமி பெயரில் கணக்கு துவங்கப்பட்டிருக்கிறதா என்பது குறித்தும், அவ்வாறு துவங்கப்பட்டிருப்பின் அதன் வரவு,செலவு விவரம் கேட்டு 18.4.2012 ஆம் தேதியிட்ட கடிதத்தில் கூடுதல் கண்காணிப்பாளர் கேட்டிருந்தார். எங்களது தலைமை அலுவலகம் மும்பையில் இயங்கி வருகிறது. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கடிதத்தில் கேட்டிருந்த விவரங்களை எங்களது தலைமை அலுவலகத்திற்கு தெரிவித்து மெயில் மூலம் அதற்கான விவரங்களைப் பெற்றேன். எங்கள் தகவல் அலுவலகத்திலிருந்து பெற்ற விவரங்களை நான் கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு கொடுத்தேன். 1.3.2012 ஆம் தேதி அன்று கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் மெயில் மூலம் அந்த விவரங்களை அப்படியே கொடுத்துவிட்டேன். எங்கள் தலைமை அலுவலகத்திலிருந்து வந்த மெயிலில் 3.7.2006 ஆம் தேதி அன்று IDBI வங்கி காசோலை எண்.354907 என்ற காசோலை வழியாக ரூ.10 லட்சம் திரு.பொங்களூர் பழனிசாமி

அவர்களிடமிருந்து எங்கள் நிறுவனத்திற்கு வரவாகியுள்ளது. அந்த விவரங்கள் அடங்கிய கோப்பை நான் கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன். அது பக்கம் 1 முதல் 28 பக்கங்களைக் கொண்டதாகும். அந்த கோப்பு அ.த.சா.ஆ.93 ஆகும். இது சம்மந்தமாக என்னை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார்.

## எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

ஐ.எஸ்.இ செக்யூரிட்டி அண்ட் சர்வீஸ் லிமிடெட் என்ன நிறுவனம் என்றால் பங்கு வர்த்தக பரிவர்த்தனை செய்யும் நிறுவனமாகும். மேற்படி நிறுவனத்திற்கும், பொங்களூர் பழனிசாமிக்கும் என்ன தொடர்பு என்றால் எங்கள் நிறுவனத்தின் **Sub Broker Ms.Silver Stone Shares Private Limited** மூலமாக எங்கள் நிறுவனத்தில் திரு.பொங்களூர் பழனிசாமி பெயரில் பங்கு பரிவர்த்தனை கணக்கு துவங்கப்பட்டது. கணக்கு எண்.**D019P007** ஆகும். **23.2.2012** ஆம் தேதியிட்ட கடிதம் மூலம் தான் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னிடம் விவரங்களைக் கேட்டார். **23.2.2012** ஆம் தேதியிட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளரின் கடிதம் அ.த.சா.ஆ.**93** கோப்பில் இல்லை என்றால் சரிதான். காவல் கண்காணிப்பாளரின் வேண்டுகோள் கடிதத்தில் **13.5.2006** முதல் **31.3.2010** வரையான காலத்திற்குரிய கணக்கு விவரங்கள் மற்றும் லாபம் மற்றும் நஷ்டம் விவரங்கள் வழங்குமாறு கோரப்பட்டிருந்தது என்றால் அவ்வாறு கேட்கவில்லை. வேண்டுகோள் கடிதத்தில் உள்ள விவரங்களை அப்படியே எங்கள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பினேன். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் திரு.பொங்களூர் பழனிசாமி அவர்கள் வைத்துள்ள வர்த்தக பரிவர்த்தனை தொடர்பாக **13.5.2006** முதல் **31.3.2010** வரைக்கான காலத்திற்கு கணக்கு விவரங்கள் மற்றும் லாபம் மற்றும் நஷ்ட விவரங்கள் வழங்குமாறு எங்களது மும்பை அலுவலகத்தின் தலைமை செயல் அலுவலருக்கு கடிதம் அனுப்பி, அதன் நகல் ஒன்றை வழங்குமாறு கேட்டுள்ளேன் என கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் சொல்லவில்லை. தலைமை செயல் அலுவலருக்கு கணக்கு விவர அறிக்கை விவரம் மட்டுமே கேட்டிருந்தேன். லாபம், நஷ்டம் பற்றிய விவரங்கள் கேட்கவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னிடம் மேற்படி பழனிசாமி என்பவரின் கணக்கில் லாபம், நஷ்டம் பற்றி எதுவும் கேட்கவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் வர்த்தக பரிவர்த்தனையில் திரு.என்.பழனிசாமி எவ்வித லாபத் தொகைகளோ

ஈட்டப்பட்டு அவருக்கு வழங்கப்படவில்லை என சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் **31.03.2010** காலக்கட்டத்தின் இறுதியில் மேற்படி தொகை முழுவதும் செல்லாகி மேற்படி பரிவர்த்தனை கணக்கில் பணம் எதுவும் நிலுவையில் இல்லாமல் உள்ளது என சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை **2014** ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் என்னை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார். பதிவு செய்ததாகச் சொல்லும் வாக்கு மூலத்தை என்னிடம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் காண்பிக்கவில்லை, படித்தும் காண்பிக்கவில்லை.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/உமாசங்கர்